பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

21 03 2026 SATURDAY 12 40 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ரமலான் பண்டிகை கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
- வனங்களை பாதுகாக்க மக்கள் உறுதி எடுக்க வேண்டும் என்று மத்திய வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.
- இறக்குமதியை அதிகரித்து போதிய அளவு உரம் கையிருப்பில் இருப்பதை உறுதி செய்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- அமெரிக்காவின் Hawaii தீவில் ஏற்பட்ட கனமழையால் சாலைகள் மூழ்கி வீடுகளில் தண்ணீர் சூழ்ந்துள்ளது.
- இந்தியன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் தன்வி கன்னா, அனாகத் சிங், அபய் சிங், வீர் சோத்ராணி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

…இனி விரிவான செய்திகள்…

<<<<<<>>>>>>

ரமலான் பண்டிகை கொண்டாடப்படுவதை ஒட்டி குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கவிடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், ரமலான் பண்டிகை அன்பு, அமைதி, நல்லிணக்கம் உள்ளிட்ட கருத்துகளை பிரதிபலிப்பதாக கூறியுள்ளார்.

அனைவரின் நலனுக்காக பாடுபட வேண்டும் என்ற கருத்தை இந்த பண்டிகை எடுத்துக்காட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், ரமலான் பண்டிகை நல்லிணக்கம், நம்பிக்கை, இரக்கம் உள்ளிட்டவற்றை ஊக்குவிப்பதாக கூறியுள்ளார்.

*பிரதமர் திரு. நரேந்திரமோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், ரமலான் பண்டிகை அனைவரின் வாழ்க்கையில் மகிழ்ச்சி, நல்ல ஆரோக்கியம், வளம் பெருகட்டும் என்று வாழ்த்து தெரிவித்துள்ளார்.*

*தமிழகத்தில் சென்னை, மதுரை, வேலூர், நாமக்கல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இஸ்லாமியர்கள் உலக அமைதிக்காகவும், சகோதரத்துவத்துக்காகவும் தொழுகையில் ஈடுபட்டனர்.*

*நாகை மாவட்டம் நாகூர் தர்காவில் நடைபெற்ற ரமலான் சிறப்பு தொழுகையில் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(சவுண்ட் பைட்- ஜெபராஜ்- 36 Sec)*

*<<<<<<>>>>>>*

*இலங்கையில் ரமலான் பண்டிகை இஸ்லாமியர்களால் இன்று கொண்டாடப்பட்டு வருகிறது.*

*அதிகாலையில் இருந்து மசூதிகள், மைதானங்கள் உள்ளிட்ட இடங்களில் இஸ்லாமியர்கள் தொழுகையில் ஈடுபட்டு ஒருவருக்கொருவர் கட்டித்தழுவி ரமலான் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர்.*

*ரமலான் பண்டிகையை ஒட்டி இலங்கை அதிபர் அனுரா குமரா திசநாயகே வெளியிட்டுள்ள செய்தியில், தேசிய சவால்களை ஒன்றிணைந்து எதிர்கொள்ள வேண்டும் என்றும் ஒற்றுமையுடனும், நல்லிணக்கத்துடனும் வாழ வேண்டும் என்று வாழ்த்தியுள்ளார்.*

*<<<<<<>>>>>>*

*ஜார்கண்ட் மாநிலத்தில் பழங்குடியின மக்கள் Sarhul பண்டிகையை இன்று கொண்டாடி வருகின்றனர்.*

*Sarhul பண்டிகையொட்டி குடியரசுத் தலைவர், குடியரசு துணைத் தலைவர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*

*இது தொடர்பாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், இயற்கை வளங்களை பாதுகாத்து வளர்ச்சிப் பாதையில் முன்னேற வேண்டும் என்று கூறியுள்ளார்.*

இந்த பண்டிகை பழங்குடியின மக்கள் இயற்கையுடன் இணைந்திருப்பதின் எடுத்துக்காட்டாக உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், பழங்குடியின மக்கள் இயற்கையுடன் இணைந்து கொண்டாடும் பண்டிகை என்று கூறியுள்ளார்.

இந்த பண்டிகை அனைவரின் வீடுகளில் அமைதியையும், வளத்தையும் கொண்டு வரட்டும் என்று அவர் வாழ்த்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

வனங்களை பாதுகாக்க மக்கள் உறுதி எடுக்க வேண்டும் என்று மத்திய வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச வன தினத்தையொட்டி சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், வனம் என்பது வளம் மட்டுமின்றி உயிர் என்ற நிலையில் அதனை பாதுகாக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. சார்பில் கடந்த 2012-ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 21-ஆம் தேதி சர்வதேச வன தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

பொருளாதார வளர்ச்சிக்காக வனங்களின் பங்கு என்பதே இந்தாண்டின் கருப்பொருளாகும்.

<<<<<<>>>>>>

தேசிய பல்லுயிர் பெருக்க ஆணையம் ஆக்கிரமிப்பு உயிரினங்கள் மூலம் ஏற்படும் சுற்று சூழல் பாதுகாப்பு குறித்து ஆராய்ச்சி செய்வதற்கான நிபுணர் குழுவை நியமித்துள்ளது.

இந்த ஆக்கிரமிப்பு உயிரினங்கள் மூலம் உள்நாட்டு பல்லுயிர் பெருக்கத்திற்கு பாதிப்பு ஏற்படுவதோடு விவசாயம், உணவு பாதுகாப்பு, மனிதர்கள் மற்றும் வனவிலங்குகளின் ஆரோக்கியத்தையும் பாதிக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

மத்திய சுற்று சூழல் வனத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த நிபுணர் குழு மாநில அரசுகளுடன் இணைந்து ஆக்கிரமிப்பு உயிரினங்கள் குறித்த பட்டியலை தயார் செய்யும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த நிபுணர் குழு இரண்டாண்டுகள் செயல்பட்டு நாட்டின் பல்லுயிர் பெருக்கத்தையும், சுற்று சூழலையும் பாதுகாக்க உள்ளதாகவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

இறக்குமதியை அதிகரித்து போதிய அளவு உரம் கையிருப்பில் இருப்பதை உறுதி செய்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய உரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் நடப்பு நிதியாண்டில் உர இறக்குமதி அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

யூரியா இறக்குமதி 48 லட்சத்து 70 ஆயிரம் டன்னில் இருந்து 89 லட்சத்து 30 ஆயிரம் டன்னாக அதிகரித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

டி.ஏ.பி. உரம் இறக்குமதி 43 லட்சம் டன்னில் இருந்து 60 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளதாகவும் உள்நாட்டு உர உற்பத்தி- உள்நாட்டு உரத்தேவை இடையேயான இடைவெளியை இறக்குமதி மூலம் பூர்த்தி செய்து வருவதாகவும் உரத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

மாநிலங்களுடன் கலந்தாலோசித்து வேளாண்துறை அமைச்சரகம், உள்நாட்டு உர தேவையை கண்காணித்து நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

அசாம், கேரளம், புதுச்சேரியில் அடுத்த மாதம் ஒன்பதாம் தேதி நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் பயன்படுத்தவுள்ள மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களின் முதலாவது சமவாய்ப்புக்கு உட்படுத்துதல் முடிவடைந்துள்ளதாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

மாவட்ட தேர்தல் அலுவலர்கள், அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளன் பிரதிநிதிகள் முன்னிலையில் வாக்குப்பதிவு எந்திர மேலாண்மை முறை வாயிலாக இது மேற்கொள்ளப்பட்டதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி தூத்துக்குடி காமராஜ் பெண்கள் கல்லூரியில் நடைபெற்றது.

முதல் தலைமுறை பெண் வாக்காளர்களான கல்லூரி மாணவர்கள் வாக்களிக்க வேண்டியதின் அவசியத்தை குறித்து எமது செய்தியாளரிடம் கூறுகையில்,

*(சவுண்ட் பைட்ஸ் - 37 Sec)*

<<<<<<>>>>>>

அமெரிக்காவின் *Hawaii* தீவில் ஏற்பட்ட கனமழையால் சாலைகள் மூழ்கி வீடுகளில் தண்ணீர் சூழ்ந்துள்ளது.

இதனையடுத்து *Hanolulu* உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து மக்கள் பாதுகாப்பான இடத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

*Oahu* வட கடலோர பகுதியில் மழை வெள்ளத்தால் வீடுகள் சேதமடைந்தனர். *120* ஆண்டுகள் பழமையான *Wahiawa* அணை ஆபத்தான நிலையில் இருப்பதால் மக்கள் உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

*Lebanon Beirut* பகுதியில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது.

அப்பகுதியில் உள்ள *Hezbollah* அமைப்பின் மையங்களை நோக்கி இந்த தாக்குதலை நடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் தாக்குதல் மூலம் ஏழு லட்சத்து *60* ஆயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாக லெபனான் தெரிவித்துள்ளது.

இதனிடையே ஈரான் அதிபர் *Masoud Pezeshkian,* அண்டை நாடுகளுடன் போர் நடத்த ஈரான் விரும்புவதில்லை என்று கூறியுள்ளார்.

அப்பகுதியில் அமெரிக்கா- இஸ்ரேல் ராணுவம் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>>

மும்பையில் நடைபெற்று வரும் இந்தியன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் தன்வி கன்னா, அனாக்கத் சிங், அபய் சிங், வீர் சோத்ராணி ஆகியோர் அரையிறுத்திக்கு முன்னேறியுள்ளனர்.

*இன்று நடைபெறும் அரையிறுதி போட்டியில் அனாகத் சிங், மற்றொரு இந்திய வீரரான தன்வி கன்னாவை எதிர்கொள்கிறார்.*

*அரையிறுதி போட்டியின் ஏனைய ஆட்டங்களில் அபய் சிங், மலேசியாவின் Ameeshenraj Chandran-ஐ யும் வீர் சோத்ராணி, மலேசியாவின் சஞ்சய் ஜீவாவையும் எதிர்கொள்கின்றனர்.*

*<<<<<<>>>>>>*

*ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில், கேரளா பிளாஸ்டர்ஸ் இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.*

*கொச்சியில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு நடைபெறுகிறது.*

*இதுவரை நடைபெற்ற போட்டிகளில் மும்பை சிட்டி அணி 14 புள்ளிகளுடன் முதலிடத்திலும், தலா 13 புள்ளிகளுடன் மோகன் பஹான் அணி இரண்டாவது இடத்திலும், ஜாம்ஷெட்பூர் அணி மூன்றாவது இடத்திலும் உள்ளன.*

*ஒலிம்பிக் மற்றும் உலக நீச்சல் வீரர் Cameron McEvoy ஐம்பது மீட்டர் Free ஸ்டைல் நீச்சலில் புதிய உலக சாதனையை படைத்துள்ளார்.*

*Shenzhen சீன ஒப்பன் நீச்சல் போட்டியில் 20 புள்ளி 88 விநாடிகளில் ஐம்பது மீட்டர் தூரத்தை கடந்த புதிய உலக சாதனையை அவர் படைத்துள்ளார்.*

*பிரேசிலின் Cesar Cielo-வின் 17 ஆண்டுகளாக இருந்த சாதனை தற்போது முறியடிக்கப்பட்டது.*

*<<<<<<>>>>>>*